மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 186, திரு. வே. தம்புசாமி இருக்கையில் இல்லை.

வினா எண் 187, திரு. எம். கே. சுந்தரம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

187—

பெண்ணையாற்றில் மேம்பாலம் கட்டுதல்

***22545—**திரு. எம். கே. சுந்தரம் :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டில் இருந்து தானிப்பாடி செல்லும் சாலைக்கு இடையில் உள்ள பெண்ணையாற்றின் தரைப்பாலத்தை மாற்றி மேம்பாலமாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலிருந்து, விவசாயிகள் நலன் கருதி 90 நாட்களாக திறந்து விடப்பட்ட தண்ணீர் அங்கே பயிரிட்டு வருகின்ற விவசாயிகளுக்கு போதுமானதாக இல்லை என்று சொல்லி, தண்ணீர் திறந்து விடுவதற்கான கால அளவை மேலும் நீட்டித்துத் தரவேண்டுமென்று சொல்லி, தொகுதியில் இருக்கின்ற விவசாயிகள் சார்பாக எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பேரரசிலே பொதுப்பணித்துறை அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய அருமை** அவர்களிடத்திலே கோரிக்கையாக வைத்தபோது, விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டிருக்கிற புரட்சித் தலைவி ஆட்சியில் அதை மறுபரிசீலனை செய்து நேற்றைக்கு அந்த நீர்ப் பாசனத்தை மேலும் சில தினங்களுக்கு நீட்டித்திருக்கின்ற அந்த செயல் எங்கள் பகுதியில் இருக்கிற 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே, நெற்பயிரை பயிரிட்டிருக்கிற

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 ஏப்ரல் 3]

விவசாயிகளுக்கு ஒரு பெரிய நிம்மதியை, பெரிய ஒரு மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தித் தந்த எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பேரரசிலே பொதுப்பணித்துறை அமைச்சராக இருக்கிற ** அவர்களுக்கு என்னுடைய தொகுதியிலே இருக்கிற சாத்தனூர் அணை விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பில் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். இங்கே கேட்கப்பட்ட கேள்விக்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். தண்டாரம்பட்டிலே இருந்து தானிப்பாடிக்கு செல்லுகின்ற வழியில் இடையிலே இருக்கின்ற ஆற்றில் கட்டப்பட்டிருக்கிற தரைப் பாலம் மழை காலத்தில், சாத்தனூர் அணையிலே நீர் நிரம்பி திறந்து விடப்படுகிற நேரத்திலே, அந்த தரைப் பாலத்திற்கு மேலே நீர் செல்லுகின்ற காரணத்தாலே, தானிப்பாடிக்கு மேலே இருக்கிற கிராமங்களிலே இருந்து திருவண்ணாமலை நகரத்துக்கு செல்வதற்கும் அல்லது திருவண்ணாமலை, சென்னை, வேலூர் போன்ற நகரங்களிலே இருந்து சேலம் நகருக்கு செல்லுகின்ற பேருந்துகள் செல்வதற்கும் இடையூறாக உள்ளது. அது மக்களுடைய பயணத்திற்கு பல சங்கடங்களை ஏற்படுத்துகின்ற நிலைமையிலே இருக்கின்ற காரணத்தாலே தயவுசெய்து அமைச்சர் அவர்கள் அதனை மறுபரிசீலனை செய்து அதை மேம்பாலமாக மாற்றித் தர நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குத் தண்ணீர் விடுகின்ற பிரச்சினை வேறு. இந்த பிரச்சினை வேறு. ஆகவே இங்கே இந்த பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ ரூபாய் 3 கோடியே 80 லட்சம் தேவைப்படுகிறது. ஆகவே இப்போது இருக்கின்ற நிதி ஆதாரங்கள் அடிப்படையிலே அதைச் செய்ய இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதுசம்பந்தமாக எந்த திட்டத்திலேயும் இந்தப் பாலத்தினுடைய கட்டுமானப் பணி சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எம்.கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேம்பாலம் கட்டுவதற்குச் செலவாகின்ற தொகையை அருமை ** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார். மழைக் காலத்திலே அந்த தரைப்பாலமாக இருக்கின்ற அதன் மேலே நீர் செல்கின்றபோது அங்கே திருவண்ணாமலை நகரத்திற்குச்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செல்வதற்குக் கடினமாக இருக்கிறது என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். அப்படி தண்ணீர் நிரம்புகிற நேரத்திலே திருவண்ணாமலைக்கு செல்லவேண்டுமென்று சொன்னால் தானிப்பாடி அதற்கு மேலே இருக்கின்ற மோட்சக்கல் போன்ற கிராமங்களில் இருந்து அல்லது மேலே இருக்கின்ற தர்மபுரி மாவட்டம், சேலம் மாவட்டத்திலே இருந்து வியாபார நலன் கருதி வருகின்ற, லாரி போன்ற வாகனங்கள் செல்கின்றபோது கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை வழியாக சுற்றிக்கொண்டு அங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற மேம்பாலம் வழியாக திருவண்ணாமலை செல்லவேண்டும். அப்படி செல்கின்ற தூரம் அதிகமாக இருக்கிறது. மேலும் எங்களுடைய பகுதியிலே இருந்து திருவண்ணாமலை நகரத்திலே இருக்கின்ற கல்லூரியிலே சேர்ந்து படிக்கின்ற மாணவர்கள் அந்த காலக் கட்டத்திலே குறிப்பிட்ட நேரத்திற்கு செல்லவேண்டுமென்று சொன்னால் பேருந்து சுற்றிச் செல்கின்ற அந்த காலதாமதத்தின் காரணமாக அவர்கள் அங்கே செல்ல முடியவில்லை. மருத்துவமனை போன்ற இடங்களுக்கு செல்வதற்கு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுந்தரம். நீங்கள் டிமாண்டிலே பேசுவது மாதிரி பேசிக்கொண்டிருக்கவேண்டாம். கேள்வியை சுருக்கமாக முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் என்பது மட்டும் இருக்கலாம். * * என்பதை நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு. எம்.கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த காலதாமதத்தைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற ஆண்டிலாவது இதற்கு முன்உரிமை தந்து தரைப் பாலத்தை மாற்றி மேம்பாலமாகக் கட்டித்தர ஆவன செய்வார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படியாவது இந்த மேம்பாலம் கட்டவேண்டுமென்ற எண்ணத்திலே இருக்கிறார் என்பதிலே எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால் நிதி ஆதாரத்தைப் பொறுத்துத்தான், நான் ஏற்கனவே தெரிவித்தேன். அவர் சொல்வது போல எல்லா காலங்களிலேயும் வெள்ளம் வருவதில்லை, மழைக்காலங்களிலே தான் வெள்ளம் வருகிறது. ஆகவே சில நாட்களிலே, அது போன்று போக்குவரத்து பாதிப்பு ஒன்றிரண்டு நாட்களுக்கு ஏற்படுகிறபோது, இதுபோன்ற பிரச்சினை எழுகிறது. ஆகவே தான் மேம்பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கட்டுமானப் பணியினுடைய மதிப்பீட்டைப் பார்க்கின்றபோது ஏறத்தாழ

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 ஏப்ரல் 3]

ரூபாய் 3 கோடியே 80 லட்சம் என்று சொல்கின்ற அளவுக்கு இருக்கின்ற காரணத்தினாலேதான் உடனடியாக அரசு நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணியினை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்தேன். ஆகவே ஏற்கனவே ஒரு தரைப் பாலம் இருக்கிறது. 29 கண்கள் கொண்டதாக அந்தப் பாலம் இருக்கிறது. ஆகவே அந்தப் பாலத்திலே போக்குவரத்திற்கு தற்போது எந்தவிதமான இடையூறும் இல்லை. மழைக்காலங்களிலே அந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. எதிர்காலத்திலே நிதி ஆதாரங்களைப் பொறுத்து இதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 188, திருமதி. வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

188—

திருச்சுழி வட்டத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்

*** 35689**—*திருமதி வி.ஜி. மணிமேகலை:*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதியில் பின்தங்கிய வட்டமான திருச்சுழி வட்டத்தில் அரசு தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு.துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்பதற்கு எடுத்துக் காட்டாக இன்றையதினம் தொலை நோக்குப் பார்வையோடு 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியிலே வந்த நம்முடைய இன்றைய சந்ததியினர், இளைய தலைமுறையினர், சமுதாய நலனுக்காக, கருமமே கண்ணாக, மதமாச்சரியமற்ற செக்யுலர் கவர்ன்மெண்ட்டை பொற்கால ஆட்சியாக நடத்திவரும் நம்முடைய